## திராவிட இயக்க இதழ்கள் – ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் ‘தனி அரசு!’




தி.மு.கழக முன்னோடியான, ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் நடத்திய இதழ், ‘தனி அரசு’.

1954-55- ஆண்டுகளில் 1/8 டெம்மி அளவில் மாதம் இருமுறை ஏடாக வெளிவந்தது. பின்னர், 1958-ஆம் ஆண்டு அக்டோபர் 6 முதல் நாளிதழாக மாறி, 1963-ஆம் ஆண்டு வரை வெளிவந்தது.

முதலில், விருதுநகரில் இருந்தும், பின்னர் சென்னை முகவரியில் இருந்தும் வெளியிட்டார். சென்னை, நுங்கம்பாக்கத்தில் ஏ.வி.பி.ஆசைத்தம்பியின் வீடும், ‘தனி அரசு’ அலுவலகமும் ஒரே வளாகத்தில் இருந்தன. ‘தனி அரசு’ நான்கே பக்கங்கள் கொண்ட ஏடு. இதில் கழகச் செய்திகள், நாள்தோறும் கேலிச் சித்திரம், தலைவர்களின் பேச்சுகள், கட்டுரைகள், திரைப்பட விமர்சனங்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற நடவடிக்கைகள், கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் பேச்சுகள், திட்டங்கள் ஆகியவை இடம்பெற்றன. கழகத் தோழர்களிடையே இந்நாளேட்டிற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

## ஃப்ளாஷ்பேக்





தி.கூடலரசன்

### கவனம், வேகம் வேண்டும்!

1983-ஆம் ஆண்டு வாக்கில், ‘முரசொலி’ மதுரை பதிப்புச் செய்தியாளராக இருந்தேன். அந்த ஆண்டில் தென் மாவட்டங்களில் தேர்தல் பிரச்சாரத்தின்போது தலைவருடன் ‘டேப் ரெக்கார்டர்’ எடுத்துக் கொண்டு செல்ல வேண்டிய வேலை. சிவகங்கையில் காலை 10 மணிக்குப் பேசிவிட்டு அடுத்த கூட்டத்துக்கு புறப்பட்ட போது, எனக்கு உரிய காரில் என்னால் ஏற முடியவில்லை. தொடர்பு வசதி இல்லாத காலம் என்பதால், எப்படிச் செல்வது என யோசித்து நின்று கொண்டு இருந்தேன்... 10 கிலோ மீட்டர் சென்ற பின் காரை நிறுத்தி, என்னைக் கூப்பிடச் சொல்லி இருக்கிறார். ஆனால், நான் அங்கு இல்லை என அறிந்து என்னை அழைத்துவரச் சொல்லி இருக்கிறார். அண்ணன் தங்கபாண்டியன் வந்து காரில் அழைத்துச் சென்றார். என்னைப் பார்த்ததும், முரசொலிக்கு சொல்ல வேண்டிய செய்திகள், அடுத்த இரு கூட்டங்கள் குறித்து கூறி விட்டு, இந்த காரில் வா என்று ஏற்றிக் கொண்டு சென்றார். மதியம் உணவு விடுதியில் இருந்தபோது என்னை அழைத்து விசாரித்தவர், ‘கவனம், வேகம் வேண்டும்’ என்றார். அதையெல்லாம் இன்றும் மறக்க முடியாது. இந்தப் படம் அப்போதைய ஒரு செய்தியாளர் சந்திப்பில் எடுத்தது.

– தி.கூடலரசன், பத்திரிகையாளர். சேலம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### இரண்டு தேர்தல்கள்!

1943-ஆம் ஆண்டு, இரண்டு தேர்தல்கள் நடைபெற்றன. ஒன்று மத்திய சட்டசபைக்கு நடைபெற்றது. மற்றொன்று ‘ஸ்டேட் கவுன்சில்’ தேர்தல். இந்தத் தேர்தல்கள் ஜூன் மாதமும், செப்டம்பர் மாதத்திலும் நடைபெற்றன. இரண்டு தேர்தல்களிலும் நீதிக்கட்சி தோற்றது. இந்தத் தோல்விகளுக்குப் பின்னர், நவம்பர் மாதம் சேலத்தில் கூடிய செயற்குழுவில், கட்சியின் பெயரை ‘தென்னிந்திய திராவிடர் கழகம்’ என மாற்றம் செய்ய முதலில் முடிவு செய்யப்பட்டது.

## மாநாடு

ர.பிரகாசு 38

திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...

ஓவியம் : சிகரன்



# பார்ப்பனரல்லாதோரின் எழுச்சி!

1926-ஆம் ஆண்டு நீதிக்கட்சி, தேர்தலில் தோற்றிருந்த சமயம். டிசம்பர் 25 மற்றும் 26 தேதிகளில், மதுரையில், ‘சென்னை மாகாண பார்ப்பனரல்லாதோர் மாநாடு’ கூடியது. தந்தை பெரியார் ஏற்பாட்டில், பி.டி.ராஜன் அவர்களின் சிறிய தந்தையான உத்தமபாளையம் பெருநிலக்கிழார் எம்.டி.சுப்பிரமணிய முதலியார் மாநாட்டைக் கூட்டினார். ஏ.பி.பாத்ரோ தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரம், சாத்தூர் சுப்பிரமணியம், பட்டிவீரன்பட்டி சவுந்திரபாண்டியனார், ஜார்ஜ் ஜோசப் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மாநாட்டிற்காக சென்னையில் இருந்து மதுரைக்கு சிறப்பு ரயில் இயக்கப்பட்டது. எஞ்சினில் தொடங்கி ஒவ்வொரு பெட்டியும் மாலைகள், தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நிற்க இடமில்லாத அளவுக்கு ரயில் முழுவதும் நெரிசல். வழிநெடுகிலும் ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் பிரமாண்ட வரவேற்பு, எல்லோருக்கும் சிற்றுண்டி, உணவுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. காலை 10 மணிக்கு வரவேண்டிய ரயில் மதுரையை அடைய பகல் 1 மணி ஆகிவிட்டது. சிறப்பு ரயிலை வரவேற்க நடைமேடையில் கால் வைக்க இடமில்லாத அளவுக்குப் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் காத்திருந்தனர்.

புகையைக் கக்கியபடி ரயில்நிலையத்திற்குள் சிறப்பு ரயில் நுழைந்தவுடன், மொத்த கூட்டமும் துள்ளிக்குதித்தவாறு ‘பார்ப்பனரல்லாதோர் மாநாட்டுக்கு ஜே’ என முழக்கம் எழுப்பினர். அங்கிருந்து சுப்பிரமணிய முதலியார் இல்லத்தை நோக்கி பேரணி சென்றனர். ‘இந்தப் பேரணி பஞ்சாப் படுகொலைக்குப் பின்னர் அமிர்தசரஸில் கூடிய பேரணியை நினைவுபடுத்தியது’ என குடிஅரசில் எழுதினார், தந்தை பெரியார்.

அக்காலத்திலேயே பெரிய தகரக் கொட்டகையில் மாநாட்டுப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. தொழிற்காட்சி, விவசாயப் பொருட்காட்சி, கதர் காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. மக்கள் வெள்ளத்தில் நிரம்பி வழிந்த கொட்டகைக்குள் தலைவர்களை அழைத்துச் செல்வதே பெரும் சிரமமாகிவிட்டது. நாற்காலி போதாமல், மேடையிலேயே விரிப்பைப் போட்டு பலரும் அமர வேண்டிய சூழல் ஏற்பட்டது. வரவேற்புரையாற்றிய சுப்பிரமணிய முதலியார், “மற்றொரு வகுப்பைத் துன்புறுத்தி தன் வகுப்பை முன்னோக்கிக் கொள்ள பார்ப்பனியம் நிற்கும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும்” என்று எச்சரித்தார். தலைமை உரையாற்றிய ஏ.வி.பாத்ரோ, “ஒவ்வொருவரும் சமத்துவமான உரிமைகளையும், சமத்துவமான சந்தர்ப்பங்களையும் அடையச் செய்வதே நமது இயக்கத்தின் நோக்கம்” என்று சுயமரியாதை உணர்வைத் தட்டியெழுப்பினார்.

**“ஒவ்வொருவரும் சமத்துவமான உரிமைகளையும், சமத்துவமான சந்தர்ப்பங்களையும் அடையச் செய்வதே நமது இயக்கத்தின் நோக்கம்!”**

எல்லோரும் கதர் அணிய வேண்டும், எல்லோரும் சமமாய் பாவிக்கப்பட வேண்டும், தீண்டாமையை ஒழித்தல் வேண்டும், பார்ப்பனர்களை அழைத்து சடங்கு செய்கிற பழக்கத்தைக் கைவிடல் வேண்டும், கோயில்களில் இந்துக்கள் எல்லோருக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும், மது விலக்கு, மேட்டூரில் கட்டப்பட்டு வரும் அணையில் இருந்து சேலம் ஜில்லா முழுமைக்கும் பாசன வசதி அளிக்க வேண்டும், வங்காள ஆள்தூக்கிச் சட்டத்தை கைவிடல் வேண்டும் உள்ளிட்ட பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

நீதிக்கட்சி தேர்தலில் தோல்வியுற்ற 20 நாட்களில், பெரியார் முன்னெடுத்த இந்த மாநாடு அக்கட்சியினருக்கு புதுத்தெம்பு ஊட்டியது. பார்ப்பனரல்லாதோர் மக்களுக்கு இன உணர்வு ஊட்டியது.

...கூட்டம் திரளும்

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் 38

“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

# இலங்கை அரசியலும் இன முரண்களும்...




இந்தியாவிற்குத் தென் கிழக்கே, கிட்டத்தட்ட தமிழ்நாட்டுக்கு நெருக்கமாக ‘கண்ணீர்த் துளி’ போல் இடம்பெற்றுள்ள இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இலங்கை அதிபர் அனுர குமார திசநாயகவின் தேசிய மக்கள் சக்தி கூட்டணி, ஈழத் தமிழர்கள் பெரும்பான்மையாக இருக்கும் வடக்குப் பகுதிகள் உட்பட கணிசமான இடங்களைப் பிடித்து அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.

**சமூகத்தில் உண்மைகள் என்று நம்பவைக்கப்பட்டிருக்கும் போலிகள் மீது இந்நூல் தீக்குச்சியைக் கிழித்தெறிகிறது.**

இந்நேரத்தில் தமிழ்நாட்டு அரசியலில் 1960-ஆம் ஆண்டு தொடங்கி, 2016-ஆம் ஆண்டு வரையிலான இந்திய தேர்தல்களில் பெரும் தாக்கம் செலுத்திய இலங்கை அரசியலை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதலுக்கு எதிராக, விடுதலைப் போராட்ட அரசியலுக்கு ஆதரவாக எழுந்த குரல்கள் தமிழ்நாட்டில் குறைந்திருந்தாலும், கணிசமான தமிழர்களிடையே ஆர்வத்தையும் அக்கறையையும் தூண்டும் ஒன்றாகவே இருக்கிறது இலங்கை அரசியல்.

இப்படியான சூழலில் பல அறியப்படாத வரலாற்றுச் சம்பவங்களோடு, இலங்கையின் அரசியல், சமூகவியல், புவியியல், மொழியியல், மானுடவியல் என இலங்கை குறித்து வெளியான பல்வேறு துறை சார்ந்த புத்தகங்களின் தரவுகளின் அடிப்படையில், புலிகள் மற்றும் இலங்கை அரசின் பிழைகளைச் சுட்டிக்காட்டியும், சமகால இலங்கையின் நிலைமைகளைப் பல்வேறு கோணங்களில் அணுகியும் எழுதப்பட்டுள்ள புத்தகம்தான் தி.லஜபதி ராயின் ‘வேடர் நாட்டில் சிங்கங்களும் புலிகளும்’.

பொது ஆண்டுக்கு மூன்று நூற்றாண்டுக்கு முன்புதான் சிங்களர்களும் தமிழர்களும் இலங்கையில் குடியேறியுள்ளார்கள். சமகால இலங்கையில் இருக்கும் சிங்களர்-தமிழர் ஆகியோர் இன ரீதியாகப் பல்வேறு கலப்புகளை உட்செரித்து அரசியல் காரணங்களுக்காக இரு வேறு இனங்களாகப் பிளவுபட்டு நிற்கிறார்கள் என்பதை இந்நூல் முதன்மைப் படுத்துகிறது. மேலும் அத்தகைய ஏற்றத்தாழ்வுகள் தோன்றிய விதத்தையும், அவை இன முரண்களாகக் கூர்தீட்டப்பட்டதற்கான காரணங்களையும் நமக்குத் தெரிவிக்கிறது.

இன முரண், சமூக ஏற்றத்தாழ்வு, உலக வல்லரசுகளின் ஆயுதச் சந்தை, இந்தியா-இலங்கை இடையிலான இராஜதந்திர அயல் உறவு போன்றவை வேடர் நாட்டின் அரசியலைத் தீர்மானித்தன.

சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு நிகராக தமிழ் வெள்ளாள சாதி வெறி, ஈழத் தமிழர்களிடையே மேலோங்கி இருந்தது. மலையகத் தமிழர்களையும், தமிழ் முஸ்லிம்களையும், சக பிற்படுத்தப்பட்ட இலங்கைத் தமிழர்களையும் சமமாகப் பார்க்கத் தவறிய, தமிழ் வெள்ளாளர்கள் இலங்கைத் தமிழர் ஒருங்கிணைவைப் பாழ்படுத்தினர்.

இலங்கையில் தமிழ் முஸ்லிம்கள் சந்தித்த ஒடுக்குமுறைகள் குறித்த பகுதி, குஜராத் கலவரத்துடன் ஒப்புநோக்கும் அளவிற்குக் கொடூரமானது.

நூலின் கடைசிப் பகுதியில் இலங்கை குறித்தும், விடுதலைப் புலிகள் குறித்தும் இது வரை வெளியான பெரும்பாலான புத்தகங்கள் குறித்த விமர்சனங்களும் இடம்பெற்றுள்ளது. புலிகளோடு உண்மையிலேயே நெருக்கமாக உறவாடிய (சீமான் அல்லாது) தமிழ் ஆளுமைகளோடு இந்நூல் ஆசிரியர் மேற்கொண்ட நேர்காணல்களும், துணை நூல் பட்டியலும், அடிக்குறிப்புகளும் இந்நூலின் பெரும் பலம்.


சமூகத்தில் உண்மைகள் என்று நம்பவைக்கப் பட்டிருக்கும் போலிகள் மீது இந்நூல் தீக்குச்சியைக் கிழித்தெறிகிறது.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

664

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.